இல்லத்தரசியாக இருக்க விரும்ப வேண்டும்.

(15) திருமணம் மற்றும் ஈமச்சடங்குகளை மட்டுமாவது சொந்த மண்ணில்தான் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்க வேண்டும். ஊர்த்திருவிழாவின் போது பிள்ளைகளை அழைத்து வந்து நம் நாகரிகங்களை அறிமுகம் செய்ய வேண்டும்.

(16) நகரத்தார் புள்ளிவிபரம் புதுப்பிக்கவேண்டி நகரக்கோயில்கள்வழி பிறப்பு, இறப்பு, திருமணம், விலாசம், வயது, படிப்பு, வேலை முதலியவைகளை முறையாகப் பதிவு செய்து இத்தகவல்களை அனைவருக்கும் எளிதில் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

(17) குலதெய்வ வழிபாடு, உறவுப்பெயர்கள் மற்றும் பாட்டன் பெயர் பேரனுக்கு என்ற முன்னோர் பழக்கங்களை நினைவில் கொண்டு செயல்படுத்த வேண்டும்.

(18) தொழில் முனைவோர்கள் பணத்தை முதலீடு செய்ய ஆலோசனைக்கூட்டங்கள் வைத்து வழிகாட்டலாம்.

(19) சமூக இதழ்கள்வழி சமூக சீர்திருத்தக் கட்டுரைகளை வெளியிட வேண்டும்.

(20) "நகரத்தார் வரலாறு குறிப்பிட்ட ஓர் எல்லைக்கோ குறிப்பிட்ட ஒரு காலத்துக்கோ, குறிப்பிட்ட ஓர் இனத்துக்கோ உட்பட்டதன்று. நகரத்தார்கள் இருந்த இடம், சென்ற இடமெல்லாம் வரலாற்றுத் தடங்கள் உண்டு. சைவசமயம் கடல்கடந்து பரவியதற்கும் கோயிற்கலைகள் அங்கெல்லாம் நிலைத்து இருப்பதற்கும் நகரத்தார் தம் பொதுத் தொண்டு மனமே தலையாய காரணமாகும். நகரத்தார் இமயம் முதல் குமரிவரை ஆற்றியிருக்கும் தொண்டுகள் அளப்பரியவை. எனவே நகரத்தார் வரலாறு, தமிழ்நாடு வரலாற்றிலும், தமிழ்மொழி வரலாற்றும், இந்திய விடுதலை வரலாற்றிலும், தொழில் வரலாற்றிலும் கணிசமான பங்குடையது இவைபற்றிய பெயராய்வு வளரும் பேராய்விற்-குத் துணை செய்யும் '<u>நகரத்தார் ஆய்வுத் திட்டம்</u>' ஒன்று

பல்கலைக்கழகத்தில் நிறுவ நகரத்தார்கள் பொருளுதவி செய்ய வேண்டும்" என்று வ. சுப. மா அவர்கள் நகரத்தார் இதழ் ஒன்றில் குறிப்பிட்டுள்ள செய்தி இங்கு, ஆழ்ந்து நினைவுகூறத் தக்கது.

முடிவுரை :-

ஒரு சமூகத்தின் போக்கை மாற்றுவது என்பது எளிய செயலன்று. மனம் புண்படாதவாறு பண்போடு எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் நன்மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாகும்.

" வரப்புயர நீர் உயரும்
நீருயர நெல் உயரும்
நெல்லுயரக் குடி உயரும்" என்ற

ஔவையாரின் வாக்குப்படி தனிமனிதன் தன்னைப் பற்றியும், தன்னைச் சார்ந்தோரின் அக்கறைபற்றியும் பின்தன் சமூகத்தைப் பற்றியும் எண்ண முற்பட்டால் முழு சமூகத்திலும் நன்மாற்றம் நிகழும்.

எனவே நகரத்தார் பெருமக்கள் இன்றைய நிலையில் ஏற்றம் காணாது இருக்கின்ற தன் சமூகத்தின் வளர்ச்சியில் அக்கறைகாட்ட ஆரம்பித்திருப்பது வரவேற்கத் தக்க திருப்பமாகும். செம்மைசான்ற நிபந்தனைகளின் வழிநின்று செயல்பட்டால் ஏற்றம் காண்பது திண்ணம்.

" தளராமையே தொண்டின் இலக்கணம் "
முறையோடு முயன்றால் முன்னேற்றம் நிச்சயம்!

நன்றி, வணக்கம்.